**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | |
|---|---|
| **Calendar** | **: CC. 144/2015** |
| **Miscellaneous** | **:** |
| **Summary Trial** | **:** |
| **Maintenance** | **:** |
| **Deposition of witness for prosecution** | **: PW.3. தங்கவேலு** |
| **Fathers Name/Husband Name** | **: கந்தசாமி** |
| **Village** | **:** |
| **Taluk** | **:** |
| **Caste** | **:** |
| **Calling** | **:** |
| **Religion** | **:** |
| **Age** | **:** |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 29.06.2022

**முதல் விசாரணை:**

நான் தற்போது பணிஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 27.05.15ம் தேதி உசிலம்பட்டி தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பொறுப்பில் இருந்த போது குஞ்சாம்பட்டியை சேர்ந்த அடைக்கலம் மகன் ராமன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.122-15 சட்டப்பிரிவுகள் 279, 304(எ) இதசவாக வழக்கு பதிவு செய்தேன். அவர் கொடுத்த புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை **அசா.ஆ.1 மற்றும் அசா.ஆ.2** ஆகும். அன்றே 10.30 மணியளவில் சம்பவயிடம் சென்று பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அவைகள் **அசா.ஆ.3 மற்றும் அசா.ஆ.4** ஆகும். அதன்பின்னர் உசிலம்பட்டி அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் இருந்த அடைக்கலம் என்ற சிறுவனின் பிரேதத்தை பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அசா.ஆ.5** இறப்பின் தன்மை அறியும் பொருட்டு பிரேத

பரிசோதனை செய்ய வேண்டுகோள் கடிதம் முதல்நிலைக்காவலர் திரு.தமிழ்மணி-391 என்பவர் மூலம் கொடுத்து அனுப்பினேன். பிரேத பரிசோதனைக்கு பின் பிரேதத்தை அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைத்தேன். இத்துடன் எனது விசாரணை முடித்து வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்காக காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

அசா.ஆ.1 புகாரில் சம்பவத்தில் நேரில் பார்த்த சாட்சியாக செல்வம் என்பவர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சைக்கிளில் விபத்தில் இறந்தவர் முன்பாகவும் புகார்தாரர் அவருக்கு பின்னாலும் சென்றார் என புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். செல்வத்தை நான் விசாரித்த போது அவர் என்னிடம் சத்தம்கேட்டு ஓடிப்போய் விபத்து பார்த்ததாக கூறினார் என்றால் சரிதான். வாகனம் எவ்வளவு வேகமாக சென்றது என்பதை குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் அவர் குறிப்பிட்டு வேகத்தை பற்றி சொல்லவில்லை அதிவேகமாக சென்றதாக குறிப்பிட்டுள்ளார். அஜாக்கிரதையின் தன்மை பற்றி அவர் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. மேற்படி பேருந்தை எதிரி அஜாக்கிரதையாகவும் அதிவேகமாகவும் ஹாரன் அடிக்காமலும் ஓட்டிவந்து விபத்தை ஏற்படுத்தியதாக குறிப்பிட்டுள்ளார். பேருந்தின் எந்த பகுதி சிறுவன் மீது மோதியது என்று புகார்தாரர் குறிப்பிட்டுள்ளாரா என்றால் குறிப்பிடவில்லை வாகனம் மோதியதாக குறிப்பிட்டுள்ளார். வழக்கு சம்பவயிடத்தில் இருந்து மேற்கு பக்கம் சுமார் 300 அடி துாரத்தில் மலை உள்ளது. வழக்கு விபத்தில் இறந்த சிறுவன் சைக்கிளை சரியாக பேலன்ஸ் செய்து ஓட்ட முடியாமல் தவறி ரோட்டில் விழுந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. விபத்தில் சிறுவன் இறந்துவிட்டதால் பெரிய வாகனத்தின் மீது தவறு என்று நாங்களாகவே கர்ப்பனை செய்து கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. எதிரி ஓட்டிவந்தது கல்லூரி பேருந்து என்பதால் அன்றையதினம் மெதுவாகத்தான் வாகனத்தை கவனமுடன் ஓட்டிவந்தார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S.d./ Thangavelu
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.